# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in

## முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண். 65 /2018

திருமதி.S. சத்தியா,
1/34, கள்ளர் தெரு, புலவஞ்சி கிராமம் & அஞ்சல்,
மதுக்கூர்(வழி), பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம் – 614 903.
(செல் – 733 95 37550) . . . மேல்முறையீட்டாளர்
(திரு.V. சிவக்குமார்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 613 007.

. . . எதிர்மனுதாரர்
(திரு. V.மாறன்/ செயற்பொறியாளர் / O&M / பட்டுக்கோட்டை)

**கேட்புரை நாள் : 21–02–2019**

**ஆணை நாள் : 09-10-2019**

திருமதி.S. சத்தியா, 1/34, கள்ளர் தெரு, புலவஞ்சி கிராமம் & அஞ்சல், மதுக்கூர்(வழி), பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் – 614 903 அவர்களின் 05.11.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.65/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21–02–2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் தனது குடியிருப்பினை விரிவாக்கம் செய்திட வேண்டி தனது குடியிருப்பு வளாகத்தினுள்ளேயே கூடுதல் கட்டிடம் கட்டி வருவதை விதிமுறைகளின் படி தவறு என்று வீதப்பட்டியை தற்காலிக மின் இணைப்பாக மாற்றியுள்ளதை ரத்து செய்திட வேண்டி மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீட்டாளர் மனு சமர்ப்பித்துள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தனது குடியிருப்பினை விரிவாக்கம் செய்திட தனது குடியிருப்பின் வளாகத்தினுள்ளேயே கூடுதல் கட்டிடம் 750 ச.அடி கட்டி வருவதை உதவி செயற்பொறியாளர்/மதுக்கூர் அவர்கள் மின் இணைப்பு எண்.448–004–46–ன் வீதப்பட்டியை தன்னிச்சையாகவும் தவறுதலாகவும் வீட்டு மின் இணைப்பிலிருந்து தற்காலிக மின் இணைப்பாக மாற்றம் செய்துள்ளதை ரத்து செய்திட வேண்டி மேல்முறையீடு செய்துள்ளார்.

2.3 இது தொடர்பாக மேல்முறையீட்டாளர் தனது முறையீட்டை தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 4.9.2018 நாளிட்ட தனது மனுவை அளித்துள்ளார். 50 நாட்கள் கடந்தும் மன்றம் அம்மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மேல்முறையீட்டாளர் மின்குறை தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

### 3. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :

3.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.2.2019 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

3.2 மேல்முறையீட்டாளர் திருமதி S.சத்தியா அவர்கள் சார்பாக திரு.V. சிவக்குமார்அவர்கள் இந்த கேட்புரையில் கலந்து கொண்டார்.

3.3 எதிர்மனுதாரர் திரு. V.மாறன்/ செயற்பொறியாளர் / O&M / பட்டுக்கோட்டை அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

4. <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

4.1 மேல்முறையீட்டாளர் தனது குடியிருப்பு வளாகத்தினுள்ளே 750 ச.அடி கூடுதல் கட்டிடம் கட்டி வருவதாகவும், மேற்கண்டவாறு கூடுதல் கட்டிடம் கட்டிட வீதப்பட்டி 1ஏ யில் அனுமதிக்க இயலாது என்றும், வீதப்பட்டி 6 ஆக மாற்றம் செய்திட வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகள் வாய்மொழி உத்திரவு வழங்கியதற்கு TNERC's SMT Order No. 9 of 2014 dt. 11.12.14-ன் படி தான் செய்வது சரியே என்று கூறி வந்த நிலையில் 20.08.18 அன்று 6/18 ம்–மாத மின்கட்டணம் செலுத்த அலுவலகம் சென்றால் மேற்கண்ட மின் இணைப்பின் வீதப்பட்டி தற்காலிக மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அதிரடியாக தெரிவித்ததால் அதனை செலுத்திட இயலாது என்பதுடன் தனக்கு ஏன் முன்கூட்டியே தெரிவிக்கவில்லை என்று கேட்டதற்கு உங்கள் வீட்டை சோதனை செய்த கணக்கீட்டு அலுவலரின் உத்திரவின் பேரில் தான் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்றதாகவும் தெரிவித்துள்ளார்.

4.2 மேலும் மின்சாரம் தவறாக உபயோகப்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் தன்மீது திருட்டு வழக்குதான் பதிவு செய்ய முடியும் என்றும், அவர்களாகவே எவ்வாறு வீதப்பட்டி மாற்றம் செய்ய முடியும் என்று கேட்டதற்கு பதில் சொல்ல முடியாமல் நீங்கள் உதவி பொறியாளர் (அ) உதவி செயற்பொறியாளர் (அ) செயற்பொறியாளர் (அ) மேற்பார்வைப் பொறியாளர் ஆகியோரிடம் போய் சொல்லுங்கள், அவர்களின் உத்திரவின்படிதான் இவ்வாறு செய்கிறோம் என்று வசூல் பிரிவில் உள்ள வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட நபர்கள் கூறியதாக தெரிவித்துள்ளார்.

4.3 இதுகுறித்து 24.08.18 அன்று அலுவலகம் சென்று கேட்டதற்கு மேற்கண்ட மின் இணைப்பினை 1ஏ யிலிருந்து 6 ஆக வீதப்பட்டி மாற்றம் செய்திட திரு. ராஜகோபால் என்பவர் விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்தனர். மின் இணைப்பின் நுகர்வோர் இறந்த விவரம் கூட தெரியாமல் இவர்களாகவே நுகர்வோரின் கையொப்பத்தை முன்தேதியிட்டு வீதப்பட்டி மாற்றம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

4.4 இது குறித்து உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோரது முகவரிக்கு மின் அஞ்சல் மற்றும் பதிவு அஞ்சல் வழி தனது புகாரினை கெடு தேதிக்கு 7 நாள்கள் முன்னதாகவே அனுப்பி மின் இணைப்பின் வீதப்பட்டியை மாற்றி 6/18 மின்கட்டணத்தை உரிய காலகெடுவிற்குள் செலுத்திட உதவிட வேண்டுமாய் கோரியிருந்ததாகவும், 4.9.2018 வரை யாதொரு பதிலும் வராமையால் தஞ்சாவூர் மின்குறைதீர்

மன்றத்தில் புகார் படிவத்தை சமர்ப்பித்தபின் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 2.11.18 அன்று மின்துண்டிப்பு செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

## 5. <u>எதிர்மனுதாரரின் வாதங்கள் :</u>

5.1 திருமதி. செ.சத்தியா, 1/34, கள்ளர் தெரு, புலவஞ்சி கிராமம், மதுக்கூர் வழி, பட்டுக்கோட்டை தாலுக்கா (மின் இணைப்பு எண்.448–004–46) அவர்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கு கிழக்கு புறம் 30 அடிக்கு மேல் இடைவெளிவிட்டு புதிய வீடு கட்டுமான பணி நடைபெற்று வந்ததால் அம்மாதம் மின்பயன்பாட்டு கணக்கீடு செய்வதற்காக அங்கு சென்ற கணக்கீட்டாளர் அவர்கள் அதற்கு ஏற்படும் மின்சார தேவைக்காக தற்காலிக மின்இணைப்பு பெற்று கொள்ளுமாறு கூறியதாகவும், அலுவலகத்தில் உள்ள புகார் பதிவேட்டில் 07.06.2018 அன்று மேற்கண்ட கட்டுமானம் குறித்து எழுதி வைத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

5.2 வருவாய் மேற்பார்வையாளர் அவர்கள், கட்டுமானம் நடைபெறும் இடத்தை 12.06.2018 அன்று திருமதி. செ. சத்தியா நுகர்வோர் அவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்தபோது மின்சார தேவைக்காக தற்காலிக மின்இணைப்பு பெற்றுகொள்ளுமாறு வாய்மொழியாக சொல்லப்பட்டதாகவும் திருமதி. செ. சத்தியா அவர்களின் பிரதிநிதி மூலம் வீட்டு உபயோகத்தில் உள்ள மின் இணைப்பை தற்காலிக மின்இணைப்பாக மாற்றம் செய்து தர திரு.ராஜகோபால் அவர்கள் பெயரில் விண்ணப்பம் பெறப்பட்டு இடத்தை கள ஆய்வு செய்து அதற்கான விண்ணப்ப பதிவுகட்டணத்தை பெற்று கொண்டு 26.06.2018 அன்று தற்காலிக மின்இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். திரு.ராஜகோபால் அவர்கள் இறந்துவிட்டார் என்பது திருமதி. செ. சத்தியா அவர்கள் தெரிவித்த பிறகுதான் பிரிவு அலுவலகத்திற்கு தெரியவந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

5.3 திருமதி. செ. சத்தியா அவர்கள் 04.09.2018 அன்று மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் புகார் மனு அளித்ததாகவும், ஆனால் அவர்களுடைய வீட்டு மின்இணைப்பை துண்டிப்பு செய்யக்கூடாது என எந்தவிதமான முறையீடும் குறைதீர்மன்றம் தஞ்சாவூர் அவர்களிடம் தெரிவிக்கவில்லையெனவும், மாதாந்திர மின்கட்டணம் தொகை செலுத்தாத காரணத்தால்தான் மின்துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

5.4 மேலும் எந்த ஒரு கூடுதல் கட்டுமானமும் 2000 சதுரடிக்கு மிகாமல், அந்த மின்

நுகர்வோருடைய வளாகத்தினுள்ளேயே கட்டப்படுமேயானால், அதற்கு ஏற்கனவே பெற்றிருந்த மின் இணைப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், அம்மின் இணைப்பு குடிசை மற்றும் விவசாய மின் இணைப்பாக இல்லாதபட்சத்தில், ஒருவேளை அவ்வாறு 2000 சதுரடிக்கும் அதிகமாக அக்கட்டுமானம் இருந்ததால், அங்கு மின்சாரம் பயன்படுத்தவதற்கு தற்காலிக மின் இணைப்பு நிச்சயமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவித்தார். தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் பகிர்மானம் விதிகள் 1–ன் படி நுகர்வோர் இருப்பிடம் என்பது மின் இணைப்பு தரப்பட்ட பகுதியாகும். எனவே இருப்பிடத்திலிருந்து சுமார் 30 அடி தூரத்தில் கட்டப்படும் புதிய கட்டுமான பணிக்கு தற்காலிக மின்இணைப்பையே பயன்படுத்த வேண்டும் என்றும் ெ தரிவித்தார். மேற்கண்ட மின்இணைப்பு வாரியவிதிகளை பின்பற்றியே விகிதமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## 6. மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு

**6.1** இருதரப்பினரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

1. ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கும், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ள கட்டண வீதப்பட்டியல் யாது?

2. மேல்முறையீட்டாளரின் கூடுதல் கட்டிடம் எந்த வீதப்பட்டியலில் வகைப்படுத்தப்பட வேண்டும் ?

3. மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பின் வீதப்பட்டியலை Ia-யிலிருந்து வீதப்பட்டி VI ற்கு மாற்றம் செய்தது சரிதானா?

4. மேல்முறையீட்டாளருக்கு வேறு நிவாரணம் ஏதும் வழங்கமுடியுமா **?**

**6.2** மின்குறைத்தீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட வாதங்கள் ஆகிய முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைத்தீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

**7. <u>வழக்கெழு வினா 1 ற்கான தீர்வு</u>:**

**7.1** ஒரு புதிய கட்டிடம் கட்டிவதற்கு ஏற்பனவே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை விரிவாக்கம் செய்வதற்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கட்டண வீதப்பட்டியலை அறிய ஆணையம் வழங்கியுள்ள T.P. No.1 of 2017, 11.8.2017 நாளிட்ட கட்டண ஆணையை ஆராய விரும்புகிறேன். ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***6.2 Tariff for Low Tension Supply Consumers***

***6.2.1 General Provisions applicable for Low Tension Supply***

***---------***

*(f) Supply used for any additional construction of building not exceeding 2000 square feet within the consumer’s premises shall be charged under the respective existing tariff except in case of LT tariff I-B and IV. The use of electricity for the additional construction purposes beyond 2000 square feet shall be provided with a separate service connection by the licensee and charged under LT Tariff VI.*

**7.2** மேலேயுள்ள விளக்கத்தின் மூலம் நாம் அறியவருவது மின் நுகர்வோரின் வளாகங்களுக்குள் **2000** சதுர அடிக்கு மேற்படாமல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்குப் பயன்படுத்தும் மின்வழங்கள், தாழ்வழுத்த மின்கட்டணம் I B (குடிசை மின்னிணைப்பு) மற்றும் IV (விவசாய மின்னிணைப்பு) தவிர இருந்து வரும் அந்தந்த மின் கட்டணத்தின் கீழ் வசூலிக்கப்படும். அதாவது வீட்டு மின்னிணைப்பின் கீழ் கூடுதல் கட்டுமானம் என்றால் Ia-லிலும், கடை மற்றும் வணிக வளாகங்களில் கூடுதல் கட்டுமானம் என்றால் Tariff-V –லும் வசூலிக்கப்படும். **2000** சதுர அடிக்கு மேல் செய்யப்படும் கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கான பயன்பாட்டிற்கு தனிப்பட்ட மின்னிணைப்பு உரிமம்தாரரால் வழங்கப்படும் மற்றும் அது தாழ்வழுத்த மின் கட்டணம் VI-ன் கீழ் வசூலிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.

**7.3** தாழ்வழுத்த மின்கட்டணம் VI-ஐ பொருத்தவரை இந்தக் கட்டணம் தற்காலிக நடவடிக்கைகள், கட்டிடக் கட்டுமானம் மற்றும் அபரிதமான விளக்கொளி ஆகியவற்றிற்கான

மின்வழங்கலுக்கு பொருந்தக்கூடியதாகும். மேலும் ஏற்கனவே மின்னிணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வரும் மின் நுகர்வோரின் வளாகங்களில் 2000 சதுர அடிக்கு மேல் கட்டப்படும் கூடுதல் கட்டுமானத்திற்கான மின்வழங்கலானது தனிப்பட்ட மின்னிணைப்பாக வழங்கப்பட்டு இந்த மின்கட்டணத்தில் (VI) வசூலிக்கப்படும் என்றும் அறியமுடிகிறது.

7.4 மேற்கண்ட தீர்வுகளின்படி மின் நுகர்வோரின் வளாகங்களுக்குள் 2000 சதுர அடிக்கு மேற்படாமல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அந்தந்த வீதப்பட்டியலிலேயே ( IB மற்றும் IV தவிர்த்து) மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும், 2000 சதுர அடிக்கு மேற்ப்பட்ட கூடுதல் கட்டுமானமோ அல்லது தனிக் கட்டுமானமோ என்றால் வீதப்பட்டி VI-ல் வசூல் செய்யப்பட வேண்டுமென தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>வழக்கெழு வினா 2 ற்கான தீர்வு</u>:**

8.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் அவரது குடியிருப்பு வளாகத்தினுள்ள 750 சதுர அடியில் கூடுதல் கட்டிடம் கட்டி வருவதாக தெரிவித்துள்ளார். மேலும் தன்னுடைய வளாகத்தினுள் கட்டப்பட்டு வரும் 750 சதுர அடி கூடுதல் கட்டிடத்திற்கு தற்போது அந்த வளாகத்தில் செயல்பட்டு வரும் மின்னிணைப்பு எண். 06-448-004-46, வீதப்பட்டி Ia- விலேயே தொடர்ந்து மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் SMT Order No. 9 of 2014 dated 11.12.2014 & T.P. No. 1 of 2017 dated 11.8.2017 ஆகிய மின் கட்டண ஆணைகளின் வழங்கியுள்ள உத்திரவின்படியே தனது கூடுதல் கட்டுமானம் நடந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

8.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளர் அவர்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கு கிழக்குபுறம் 30 அடிக்கு மேல் இடைவெளி விட்டு புதிய வீடு கட்டுமான பணி நடைபெற்று வருவதாகவும் அவ்வாறு நடைபெறும் கட்டுமானமானது மேல்முறையீட்டாளரின் வளாகத்தினுள் ஏற்கனவே கட்டப்பட்டு குடியிருந்து வரும் வீட்டிற்கு இடைவெளி விட்டு கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

8.3 மேலும் <u>Coconut garden SF No. 158/3C – Pulavanchi village</u> எனும் தலைப்பிடப்பட்ட வரைபடம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அந்த வரைபடத்தில் ஒரே வளாகத்தினுள் தற்பொழுது குடியிருந்து வரும் இரண்டு வீடுகளும் மற்றும் கட்டப்பட்டு வரும் ஒரு கட்டுமானமும் இருப்பது

தெரியவருகிறது. தற்பொழுது குடியிருந்து வரும் இரண்டு வீடுகளில் திரு. ராஜகோபால் பெயரில் மின் இணைப்பு எண். 46-ம், திரு. பாஸ்கரன் பெயரில் மின் இணைப்பு எண்.194-ம் பயன்பாட்டில் இருந்து வருவது அறிய முடிகின்றது. மேலும் திரு. ராஜகோபாலின் வீட்டு மின் இணைப்பு எண். 46-லிருந்துதான் மேல்முறையீட்டாளரின் கட்டுமானத்திற்கு மின் இணைப்பு உபயோகப்படுத்துவதாகவும் அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாமல் தற்பொழுது நடந்து வரும் கட்டுமானம் திரு. ராஜகோபால் அவர்கள் வீட்டிலிருந்து 30 அடி இடைவெளிவிட்டு கட்டப்பட்டு வருவதையும் அறிய முடிகிறது.

8.4 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரும் மற்றும் எதிர்மனுதாரர்களும் ஆணையம் வழங்கிய மின்கட்டண ஆணையை மேற்கோள் காட்டியே வாதுரை செய்கிறார்கள். 2000 சதுர அடிக்கு மிகாமல் ஒரே வளாகத்திலேயே அமையப்பெறும் கட்டுமானத்திற்கு வளாகத்தினுள் அமைந்திருக்கும் வீட்டு மின்னிணைப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மேல்முறையீட்டடளர் தெரிவிக்கிறார். எதிர்மனுதாரரோ ஒரே வளாகத்தில் அமையப்பெற்றாலும் தற்பொழுது குடியிருந்து வரும் வீட்டிலிருந்து கிழக்கு புறம் 30 அடி இடைவெளி கட்டப்படுவதால் தனியாக மின் கட்டண வீதப்பட்டியல் VI-ல் வழங்கப்பட வேண்டும் என்றும் இடைவெளி இருப்பதால் வீட்டுப்பயன்பாட்டின் மின் கட்டண வீதப்பட்டி IA அனுமதிக்க முடியாது என்றும் தெரிவிக்கிறார். மேலும் இது சம்பந்தமான வழக்கு எண். AP No. 44 of 2014-ல் மின்குறைதீர்ப்பாளர் புதியதாக கட்டப்படும் வீட்டிற்கு தற்காலிக வீதப்பட்டி VI-ல் வழங்க வேண்டும் என்று தீர்வு செய்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

8.5 மேலேயுள்ள வாதங்களின் மூலம் அறியவருவது, மேல்முறையீட்டாளரின் கட்டுமானமானது ஒரே வளாகத்தில் அமைந்திருந்தாலும் தற்பொழுது மின்னிணைப்பு பெற்றுள்ள மின் இணைப்பு 46 அமையப் பெற்றுள்ள கட்டிடத்திலிருந்து 30 அடி இடைவெளிவிட்டு கட்டப்பட்டு வருகின்றது. வழக்கெழு வினா 1-ற்கான தீர்வின்படி மின்நுகர்வோரின் வளாகங்களுக்குள் 2000 சதுர அடிக்கு மிகாமல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அந்தந்த வீதப்பட்டியலிலேயே மின்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும். இங்கு <u>கூடுதல் கட்டுமானம் (Additional construction)</u> என்பது மின்னிணைப்பு பெற்றுள்ள தற்பொழுதுள்ள கட்டிடத்தை ஒட்டி பக்கவாட்டிலோ அல்லது கட்டிடத்தின் மேற்பகுதியிலோ இடைவெளி இல்லாமல் <u>விரிவாக்கம் செய்து</u> கட்டப்படுவதாகும். ஒரே வளாகத்தில் அமைந்திருந்தாலும் தற்பொழுது மின்னிணைப்பு பெற்றுள்ள கட்டிடத்தை விட்டு

சற்று இடைவெளிவிட்டு அமைக்கப்படுமேயானால் அதை ஒரு தனிகட்டுமானமாகவே (separate construction) கருத வேண்டும். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் கட்டண ஆணையில் Additional construction என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. Any construction within the consumer's premises என்று குறிப்பிடப்படவில்லை. வளாகம் (premises) ஒன்றாக இருந்தாலும் கூடுதல் கட்டிடம் (அதாவது விரிவாக்கம் செய்து கட்டப்படும் கட்டிடம்) என்பதற்கும் தனிக்கட்டிடம் என்பதற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. எனவே, இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் கட்டுமானம் மின் இணைப்பு எண். 46 உள்ள கட்டிடத்திலிருந்து இடைவெளி விட்டு அமைக்கப்பட்டிருப்பதால் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பிற்கான மின் வழங்கல் வீதப்பட்டி VI-ல் தான் வழங்கப்பட வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.0 <u>வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு</u>:**

**9.1** மேல்முறையீட்டாளர் அவரது விண்ணப்பம் இல்லாமல் தன்னிச்சையாக வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் மின்னிணைப்பின் உரிமையாளராகிய திரு. ராஜகோபால் அவர்கள் இறந்தது கூட தெரியாமல் அவர் விண்ணப்பம் அளித்தாக கூறி வீதப்பட்டி மாற்றம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**9.2** எதிர்மனுதாரரோ, திருமதி சத்தியா அவர்களின் பிரதிநிதி மூலம் வீட்டு உபயோகத்தில் உள்ள மின்னிணைப்பை தற்காலிக மின்னிணைப்பாக மாற்றம் செய்து தர திரு. ராஜகோபால் அவர்களின் பெயரில் விண்ணப்பம் பெறப்பட்டு இடத்தை களஆய்வு செய்து அதற்கான விண்ணப்பதிவு கட்டணத்தை பெற்றுக் கொண்டு 26.6.2019 அன்று தற்காலிக மின்னிணைப்பாக மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் திரு. ராஜகோபால் அவர்கள் இறந்து விட்டார் என்பது மேல்முறையீட்டாளர் தெரிவித்த பிறகு தான் அலுவலகத்திற்கு தெரிய வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

**9.3** ஒரு மின்னிணைப்பை வீதப்பட்டி மாற்றம் செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய வழங்கல் விதி எண். 9(2)-ல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *(2) Whenever a tariff change is to be effected in a service connection, such change shall be effected only after obtaining a Revised Test Report (RTR) and the reading taken shall be conclusive proof of the electricity supplied.*

**9.4** மேலே குறித்துரைக்கப்பட்ட விதியின்படி வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட வேண்டிய மின்னிணைப்பை களஆய்வு செய்து திருத்தப்பட்ட சோதனை அறிக்கை (Revised Test Report) பெறப்பட்ட பின்பு தான் வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் அன்றைய தினம் எடுக்கப்படுகின்ற மின் அளவு (Reading) வீதப்பட்டி மாற்றம் செய்யப்படுவதற்குமுன் பயன்படுத்திய மின்சார அளவை அறியவும் கூடிய சான்றாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிகிறது.

**9.5** இவ்வழக்கில் எதிர்மனுதாரர் களஆய்வு செய்ததாக தெரிவித்துள்ளார். அவ்வாறு களஆய்வு செய்யும்பொழுது திருத்தப்பட்ட சோதனை அறிக்கையில் (RTR) மின்னிணைணப்பு பெற்றுள்ள திரு. ராஜகோபால் அவர்களிடம் கையொப்பம் பெற கோரியிருந்தால் மின்னிணைப்பின் உரிமையாளர் இறந்துவிட்டது தெரிந்திருக்கும். எனவே மின்னிணைப்பை வீதப்பட்டி மாற்றம் செய்தது procedural lapse என தீர்வு செய்யப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினா 4-ற்கான தீர்வு</u>:**

**10.1** இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட மின்னிணைப்பு எண். 448-004-46 திரு. ராஜகோபால் அவர்களின் பெயரில் உள்ளது. திரு. ராஜகோபால் அவர்கள் 2.6.1993 அன்று காலமாகிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். அதாவது மின்னிணைப்பின் உரிமையாளர் இறந்து 25 ஆண்டுகள் கடந்த நிலையிலும் திரு. ராஜகோபால் பெயரில் வழங்கப்பட்ட மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்படாமல் மேல்முறையீட்டாளரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒழுங்குமுறை விதிகளின்படி மின்னிணைப்பு பெற்ற மின்நுகர்வோர் மட்டுமே மின்னிணைப்பு ஒப்பந்தத்தின்படியும், மின்வழங்கல் விதியின்படியும் மின்உரிமதாரரின் அனைத்து சேவைக் குறைபாட்டிற்கும் நிவாரணம் பெற தகுதியுடையவராவார்.

**10.2** மேலும் திரு. ராஜகோபால் பெயரிலுள்ள மின்னிணைப்பிலிருந்து மேல்முறையீட்டாளர் வீடு கட்டுவதற்கு மின்சாரம் பயன்படுத்தினால் அது முறையான பயன்பாடு ஆகாது. அது மின்சார சட்டம் 2003-ன் பிரிவு 126-ன் ன்டி “unauthorized use of electricity” ஆகும். மேலும் பயன்பாடு வீட்டிற்கு என்று ஒருவரின் பெயரில் பெற்று வேறு நபரின் (other than agreement holder) கட்டிடப்பணிக்கு (dishonestly) பயன்படுத்தினால் அது மின்சார சட்டம் 2003-ன் பிரிவு 135(1)(e)-ன் கீழ் மின் திருட்டாகவும் வகைப்படுத்தலாம்.

10.3 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் எந்தவொரு நிவாரணமும் பெற தகுதியுடையவரல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

## 11. <u>முடிவுரை</u>

11.1 பத்தி 8 மற்றும் 10–ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளருக்கு எந்தவொரு நிவாரணமும் வழங்க வழிவகை இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

11.2 மேல்முறையீட்டாளர் விரும்பினால், கட்டுமானத்திற்கு தனியாக ஒரு புதிய தற்காலிக மின் இணைப்பு வீதப்பட்டி VI-ல் விதிமுறைகளின்படி பெற்றுக் கொள்ளலாம்.

11.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண். 65/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி.S. சத்தியா,
1/34, கள்ளர் தெரு, புலவஞ்சி கிராமம் & அஞ்சல்,
மதுக்கூர்(வழி), பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம் – 614 903.
(செல் – 73395 37550)

2) மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 007.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் இணையதளத்தில்**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், **வெளியிடுவதற்காக**
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.